# அதை சாத்தானிடமே தள்ளி விடுகிறேன்



**வில்லியம் மரியன் பிரன்ஹாம்**

# 5

செய்தி: விளங்காத சத்தம், டிசம்பர் 18, 1960, பத்தி எண் 1-3

**ஒருவார காலமாக, சில நிமிடங்களுக்கு ஒரு முறை என் ஜலதோஷத்தை பிசாசுக்குத் திரும்ப அளித்துக் கொண்டிருந்தேன். உங்களுக்குத் தெரியுமா, ஒவ்வொரு முறை அவன் அதை எனக்குத் தந்தபோது, அதை அவனுக்கே திரும்ப அளித்துக் கொண்டிருந்தேன். நாங்கள் இன்னமும் போராடிக் கொண்டிருக்கிறோம். அவன்தான் அதை வைத்துக் கொள்ள வேண்டுமென்று நான் தீர்மானித்து விட்டேன். பாருங்கள், ஒவ்வொரு முறையும் அவன் அதை எனக்குத் தரும்போது, அதை அவனிடமே தள்ளி விடுகிறேன். அவன் அதை மறுபடியும் கொடுப்பதில் மிகவும் சமர்த்தன் என்று உங்களுக்குத் தெரியும். அதை எப்படி செய்வதென்று அவன் நன்கு அறிந்திருக்கிறான். அன்றிரவு நான்**

**கூறினது போல், முடிவில் நாம் அவனுடைய பொறுமையை போக்கி விடுவோம்.**

ஒருமுறை ஒருவனுக்காக ஜெபம் ஏறெடுக்கப்பட்டபோது, அவன், "நான் சுகமடையவில்லை என்று பிசாசு என்னிடம் கூறினான். நான் பார்த்தபோது, வியாதியின் அறிகுறிகள் அத்தனையும் துவக்கத்தில் இருந்தது போலவே இருந்தன. நான், **'சாத்தானே, நான் எந்த வித்தியாசத்தையும் காணவில்லை என்பது உண்மைதான். ஆனால் என்ன தெரியுமா? அவை என்னை விட்டுச் செல்லும் வரைக்கும், நான் தேவனுடைய மகிமைக்கென்று மும்முரமாக சாட்சி கூறப்போகிறேன். எனவே நீ இருந்து கொண்டு நான் கூறுவதைக் கேட்க விரும்பினால், அப்படியே செய்'"** என்றானாம்.

**அதுவே உண்மையான விசுவாசம். தேவனுடைய மகிமைக்கென்று சாட்சி கூறுங்கள்!** ஏனெனில் **"விசுவாசமானது நம்பப்படுகிறவைகளின் உறுதியும்,**

**காணப்படாதவைகளின் நிச்சயமுமாயிருக்கிறது.”** பாருங்கள்? **நீங்கள் விசுவாசத்தை கண்களால் காண முடியாது. அதை நம்புகிறீர்கள்** – விசுவாசத்தை.

இந்தச் செய்தி முழுவதையும் வாசிக்க

DOWNLOAD